பண்ணுருட்டி நகராட்சி

*மன்ற கூட்ட அழைப்பிதழ்*

**************

பண்ணுருட்டி நகரமன்றத்தின் **அவசர கூட்டம் ஸ்ரீ சோபகிருது** வருடம் தமிழ் மாதம் **ஆனி** 13 நாள் **27.06.2024** அவசர கூட்டம் **12.10** மணிக்கு, நகராட்சி அலுவலகத்திலுள்ள "பேரறிஞர் அண்ணா மன்ற கூடத்தில்" நடைபெறவுள்ளது.

அவ்வமயம் நகரமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

நகரமன்ற தலைவர்,
பண்ணுருட்டி நகராட்சி.

# <u>பண்ணுருட்டி நகராட்சி</u>

பண்ணுருட்டி நகராட்சி நகரமன்ற **அவசர கூட்டம்** 27.06.2024ந் தேதி வியாழக்கிழமை **மதியம் 12.10** மணிக்கு பண்ணுருட்டி நகராட்சி அலுவலகத்தில் உள்ள **"பேரறிஞர் அண்ணா"** மன்ற கூடத்தில் நடைபெறும் **அவசர கூட்டத்திற்கு** நகரமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**நகரமன்ற தலைவர்,**
**பண்ணுருட்டி நகராட்சி.**

1. மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களின் 2022–2023 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் போது கீழ்க்காணும் அறிவிப்பு செய்யப்பட்டது.

"சாலையோர வியாபாரிகளுக்கானத் திட்டம் (Street Vendors Welfare) தகுதியான சாலையோர வியாபாரிகளின் சமூக பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரத்தை உறுதி செய்திட நடப்பாண்டில் புதிய கணக்கெடுப்பு நடத்தப்பட்டு, அடையாள அட்டை வழங்கப்பட்டு, அவர்கள் எவ்வித சிரமும் இன்றி வியாபாரம் செய்வதற்கு ஏற்ற சூழல் உருவாக்கப்படும்."

இதனைத் தொடர்ந்து, நகராட்சி நிர்வாக இயக்குநர். சென்னை–28 அவர்களின் கடிதம் ந.க.எண்.20789/2021/UPA1. நாள்.16.06.2022ல், தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதாரம் பாதுகாத்தல் மற்றும் சாலையோர வியாபாரத்தினை ஒழுங்குபடுத்துதல்) திட்டம் மற்றும் விதிகள் 2015–ன்படி கணக்கெடுப்பு செய்து அவர்களுக்கு அடையாள அட்டை மற்றும் விற்பனைச் சான்று தயார் செய்து வழங்குதல் மற்றும் விற்பனைத் திட்டம் தயார் செய்தல் உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ள உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனக் கோரப்பட்டதைத் தொடர்ந்து, இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள சாலையோர வியாபாரிகளின் கணக்கெடுப்பு நடைபெற்றதில், மொத்தம் 810 நபர்கள் உள்ளனர் எனக் கண்டறியப்பட்டு. மேற்படி நபர்களுக்கு அடையாள அட்டை மற்றும் விற்பனைச் சான்றும் வழங்கப்பட்டுள்ளது. மேலும், நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை–28 அவர்களின் கடிதம் ந.க.எண்.20789/2021/UPA. நாள்.07.06.2024ல் தற்போது சாலையோர வியாபாரிகளின் கணக்கெடுப்புப் பணி முடிவுற்றதால், தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் விதிகள் 2015, அத்தியாயம் IV–ன்படி, நகர விற்பனைக் குழு அமைக்க உரிய நடவடிக்கை எடுக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதாரம் பாதுகாத்தல் மற்றும் சாலையோர வியாபாரத்தினை ஒழுங்குபடுத்துதல்) திட்டம் மற்றும் விதிகள் 2015, அத்தியாயம் IV– ன்படி, நகர விற்பனைக் குழு அமைக்கப்பட வேண்டும். நகர விற்பனைக் குழுவில் தலைவருடன் சேர்த்து மொத்தம் 15 உறுப்பினர்கள் அடங்குவர்.

| | | |
|---|---|---|
| நகராட்சி ஆணையர் | – | 1 (தலைவர்) |
| மருத்துவ அலுவலர் | – | 1 |
| காவல் அலுவலர்கள் (போக்குவரத்து காவல் அலுவலர் உள்பட) | – | 2 |
| நகராட்சியின் ஏதேனும் ஒரு அலுவலர் | – | 1 |
| சாலையோர வியாபாரிகளின் பிரதிநிதிகள் | – | 6 |
| வணிகர் சங்கப் பிரதிநிதிகள் | – | 1 |
| அரசு சாரா மற்றும் சமூதாய அமைப்பின் பிரதிநிதிகள் | – | 2 |
| குடியிருப்போர் நலச்சங்க பிரதிநிதிகள் | – | 1 |

மேற்கண்ட 15 உறுப்பினர்களில் 9 உறுப்பினர்களை (சாலையோர வியாபாரிகள் தவிர்த்து) சம்மந்தப்பட்ட நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களால் நியமனம் செய்யப்பட வேண்டும் எனவும். மீதம் உள்ள 6 உறுப்பினர்களை சாலையோர வியாபாரிகளின் பிரதிநிதிகளை தேர்தல் மூலம் 6 உறுப்பினர்களை தேர்வு செய்ய வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சாலையோர வியாபாரிகளின் 6 பிரதிநிதிகளை தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கவும், நகர வியாபார குழு தோற்றுவிக்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. நகர வியாபார குழு தோற்றுவிக்க மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. தேர்தல் தொடர்பாக ஆகும் செலவினங்களை நகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

**(கோ.எண். 1754/2022/எப்1)**

**2.** பண்ணுருட்டி நகராட்சி – பண்ணுருட்டி நகராட்சியில் திட்டப்பணிகள் நடைபெறுவதால் கீழ்கண்ட திட்டம் KNMT, 15th CFC Health, 15th CFC tied grant, SBM 2.0, SFC School Building, TURIP மற்றும் நமக்கு நாமே திட்டம் அனைத்து வார்டு பணி நடைபெறுவதால் அதனை கண்காணிக்க தொழில்நுட்ப உதவியாளர் ஒரு நபரும், Semi Skilled Labour மற்றும் நகர்மன்ற தலைவர் அவர்களுக்கு கார் ஓட்டுநர் இரு நபரும் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தி கொள்ள ஆகும் உத்தேச மதிப்பீடு ரூ.8.70 இலட்சத்திற்கு மட்டும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோ.எண். 434/2023/இ1)**

3. பண்ணுருட்டி நகராட்சி க.ந.மே திட்டம் 2024–25ன் கீழ் பண்ணுருட்டி நகராட்சிக்குட்பட்ட இரத்தினம்பிள்ளை மார்க்கெட் அதனை நவீனப்படுத்துவதற்காக திட்டப் பிரேரனை தயார் செய்து Appraisal பணி நடைபெற்று வருகிறது. தற்சமயம் இரத்தினம்பிள்ளை மார்க்கெட் பகுதியில் இயங்கி வரும் அனைத்து கடைகளையும் தற்காலிகமாக பண்ணுருட்டி பகுதியில் உள்ள களத்து மேடு பகுதிக்கு (வார்டு எண்.26, வார்டு எண்.A, பிளாக் 33, T.S.No.3/12)ல் மாற்றி அமைக்க மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிகளுக்கு வருவாய் நிதி 2024–25ன் கீழ் பணி மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

**(கோ.எண். 1040/2024/இ1)**

4. பண்ணுருட்டி நகராட்சியின் 2023–24–ம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கையினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் பதிவு செய்யலாம்

**(கோ.எண். 4117/2016/சி1)**

**இடம்– நகராட்சி அலுவலகம்** | **நகர்மன்ற தலைவர்**
**நாள் – 27.06.2024** | **பண்ணுருட்டி நகராட்சி**